S R D P S
SOCIETY FOR RURAL DEVELOPMENT PROMOTION SERVICES
Registered under Societies Registration Act 27 of 1975 - No 130 / 1990

Women Empowerment Ensures Equitable Economic Benefits, Human Rights and Environmental Protection

N.Thamizharasi, *M.A.[His], M.A.[YOGA], M.Ed.,MSW.,M.sc(PSy), PGHDHRM*
Director

மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்காக புதிய கட்டிடம் கட்டுவதற்கு நிதியுதவி வேண்டி விண்ணப்பம்

பெறுநர்

அன்புடையீர் SRDPS- ன் சார்பாக வணக்கங்கள்

பொருள் : SRDPS பெண்கள் மற்றும் குழந்தைகள் இல்லம் – மனநலம் பாதிக்கபட்டவர்கள் - மருத்துவ சிகிச்சைக்கு பின்னர் - இடைநிலை பராமரிப்பு இல்லத்தில் பராமரித்தல் - **புதிய கட்டிடம் கட்டுவதற்கு – நன்கொடை** வேண்டி விண்ணப்பம்

- கடந்த கால உதவிகளுக்கும் தொடர்புகளுக்கும் நன்றி
- திருப்பத்தூர் மாவட்டம் பாச்சல் பகுதியில் SRDPS பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான இல்லம் சார்பாக கடந்த 1990 ம் ஆண்டு முதல் சமூகப்பணி செய்து வருகிறோம். நம்முடைய இல்லத்தின் மூலம் குழந்தைகள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், மனநலம் பாதிக்கபட்டவர்கள் என ஒரு வருடத்திற்கு 200-க்கும் மேற்பட்டோர் பயன்பெற்று வருகின்றனர்
- தற்பொழுது **தமிழக அரசு புதியதாக அரசாணை ஒன்று பிறப்பித்துள்ளது.** அதில் மன நலம் பாதிக்கப்பட்டு, சிகிச்சைக்கு பின்னர் குணமடைந்த **யாரும் இல்லாத ஆதரவற்றவர்களை** சமுதயாத்தில் இணைப்பதற்காக **இடைநிலைப் பராமரிப்பு இல்லங்கள்** ஆரம்பிக்க ஆணை வழங்கியுள்ளது. தமிழகத்தில் மொத்தம் 5 மாவட்டங்களுக்கு மட்டுமே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதில் நம்முடைய திருப்பத்தூர் மாவட்டத்தில் நம்முடைய SRDPS இல்லத்தை தேர்வு செய்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இது நம்முடைய திருப்பத்தூர் மாவட்டத்திற்கு பெருமையாகும்.
- தற்பொழுது நம்முடைய இல்லத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்குவதற்கான இடவசதி மட்டுமேயுள்ளன. ஆண்களுக்கென்று தனியாக தங்கும் இடம் இல்லை. ஆதலால் **மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை முடிவடைந்த ஆண்களுக்கு வசதியாக தொழிற்பயிற்சியுடன் கூடிய கட்டிடம்** ஒன்றை கட்டுவதற்கு முயற்சி எடுத்து வருகின்றோம். அதற்கான ஆரம்பகட்ட வேலைகளும் தொடங்கியுள்ளோம். இதற்காக பல்வேறு

S R D P S
SOCIETY FOR RURAL DEVELOPMENT PROMOTION SERVICES
Registered under Societies Registration Act 27 of 1975 - No 130 / 1990

Women Empowerment Ensures Equitable Economic Benefits, Human Rights and Environmental Protection

N.Thamizharasi, *M.A.[His], M.A.[YOGA], M.Ed.,MSW.,M.sc(PSy), PGHDHRM*
Director

நலவிரும்பிகள், நன்கொடையாளர்கள், பொதுமக்கள் என பலரிடமும் நிதியுதவி கோரியுள்ளோம். ஆகையால் ஐயா அவர்கள் நம்முடைய திருப்பத்தூர் மாவட்டத்தில் தமிழக அரசின் அங்கீகாரத்தோடு செயல்பட இருக்கும் இந்த திட்டதிற்கான கட்டிடம் கட்டுவற்கு கொடையுள்ளத்தோடு நிதியுதவியளித்து மனநலம் பாதிக்கபட்டவர்களின் எதிர்கால வாழ்விற்கு உதவுமாறு தங்களைக் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்றும் நன்றியுடன்

FOUNDER - RAJAPANNEERSELVAN
 # 437, Pasumai Nagar, (Near Pachal Railway Gate), Pachal Post – 635 602, Tirupattur Tk, Tirupattur dist, Tamilnadu.
Ph: 04179 226647, Dir : 94434 37647, Off : 94426 34747, 94429 94747
Email-srdps@hotmail.com http://www.srdps.org